**சார்பு நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை :– திருமதி S. மும்தாஜ், B.Sc.,B.L.,**
**சார்பு நீதிபதி, சீர்காழி.**

----

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 03 நாள் சனிக்கிழமை

**அசல் வழக்கு எண். 2/2022 ல் இடைமனு எண். 7/2024**

அ/மி வைத்தீஸ்வரன் கோவில் வேளூர்
வைத்தியநாத சுவாமி கோவிலுக்காக
தருமபுர அதீன கர்த்தா,
வைத்தீஸ்வரன் கோயில் ..மனுதாரர் /2 ம் பிரதிவாதி

..எதிர்..

1. கிருஷ்ணமூர்த்தி .... 1 ம் எதிர்மனுதாரர்/வாதி
2. பாஸ்கர் .... 2 ம் எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 16.10.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபொழுது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். வேணுகோபாலன் அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். கார்த்திக்கேயன் அவர்கள் ஆஜராகியும், 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்கை நிராகரித்து உத்தரவு பிறப்பிக்க கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 9 மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :**

மனுதாரர் அசல் வழக்கின் இரண்டாம் பிரதிவாதி. வாதி தன்னை குத்தகைதாரர் என விளம்பல் செய்ய கேட்டும், இடைகால தடை உத்தரவு கோரியும் மற்றும் இதர பரிகாரம் கேட்டும் பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு சொந்தமான தாவா குத்தகை சாகுபடி நிலத்தினை பொருத்து வாதி பதிவு செய்யப்பட்ட குத்தகை சாகுபடிதாரர் என்று விளம்பல் செய்யக் கோரி வழக்கு

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.01.03 17:28:58 +0530

தொடர்ந்து இருப்பது நிலைநிற்கதகுந்ததல்ல. உரிமையியல் நீதிமன்றத்தில் மேற்படி வழக்கினை விசாரணை மேற்கொள்ள அதிகார வரம்பில்லை. மேற்படி வழக்கு வருவாய் நீதிமன்றத்தில் தீர்வு காணவேண்டுமென்பதால் இவ்வழக்கினை நிராகரித்து உத்தரவு பிறப்பிக்கக் கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. 1ம் <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனுதாரரின் மனு சட்டத்திற்கும், நியாயத்திற்கும் பொய்யான காரணங்களை கூறி இம்மனுவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் விசாரணை தொடங்கப்பட்டு மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கியுள்ள நிலையில் இவ்வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் மனுதாரருக்கு எதிராக எவ்வித பரிகாரமும் வாதியால் கோரப்படவில்லை. வழக்கு சொத்தை பொருத்து முழு விசாரணை செய்து வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலனை செய்து அதன் அடிப்படையில் வாதி பதிவு பெற்ற குத்தகைதாரரர் என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு விவசாய நிலங்கள் குத்தகை உரிமைகள் சட்டம் 1969ன் கீழ் அதிகாரத்தை பயன்படுத்தி உரிய அதிகாரியால் பிறப்பிக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட எந்தவொரு நடவகையையும் தடை செய்யும் பரிகாரம் கோரப்படவில்லை. முதல் பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து 2ம் பிரதிவாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே இம்மனுவை தள்ளுபடி செய்யக் கோரியுள்ளார்.

4. இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

<u>5. தீர்வு.</u>

மனுதாரர் அசல் வழக்கின் 2ம் பிரதிவாதி, மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு சொந்தமான தாவா குத்தகை சாகுபடி நிலத்தினை பொருத்து வாதி பதிவு செய்யப்பட்ட குத்தகை சாகுபடிதாரர் என்ற முறையில் உரிமையில் வழக்கு தொடர்ந்து இருப்பது நிலைநிற்கதகுந்ததல்ல என்றும், உரிமையியல் நீதிமன்றத்திற்கு மேற்படி வழக்கை விசாரணை மேற்கொள்ள அதிகார வரம்பில்லை என்றும், வருவாய் நீதிமன்றத்தில் மட்டுமே தீர்வு காணவேண்டுமென்பதால் இவ்வழக்கினை நிராகரித்து உத்தரவு பிறப்பிக்கக் கோரியுள்ளார். மனுதாரர் மனுவிற்கு 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் அசல் வழக்கில் விசாரணை துவங்கப்பட்டு மனுதாரர்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.01.03 17:29:04 +0530

தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கியுள்ள நிலையில், வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கில் மனுதாரருக்கு எதிராக எவ்வித பரிகாரமும் வாதியால் கோரப்படவில்லை என்றும், வழக்கு சொத்தை பொருத்து முழு விசாரணை செய்து வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலனை செய்து அதன் அடிப்படையில் வாதி பதிவு பெற்ற குத்தகைதாரராக இருந்து வருவது குறித்து தீர்மானித்து பரிகாரம் வழங்க கோரியுள்ளதாகவும், தமிழ்நாடு விவசாய நிலங்கள் குத்தகை உரிமைகள் சட்டம் 1969ன் கீழ் அதிகாரத்தை பயன்படுத்தி உரிய அதிகாரியால் பிறப்பிக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட எந்தவொரு நடவகையையும் தடை செய்யுமாறு பரிகாரம் கோரப்படவில்லை என்றும், முதல் பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து 2ம் பிரதிவாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்யக் கோரியுள்ளார்.

6. வழக்காவணங்களின் பரிசீலனையில் அசல் வழக்கானது வழக்கு சொத்தை பொருத்து வாதி குத்தகை சாகுபடிதாரர் என விளம்புகை செய்ய கோரியும், முதல் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 2ம் பிரதிவாதிக்கு எதிராக வாதியால் எவ்வித பரிகாரமும் கோரப்படவில்லை. மேலும் 2ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் தாவா புல எண். 10/1ல் உள்ள 1 ஏக்கர் 42 செண்ட் நிலம் மற்றும் இதர நிலங்களையும் சேர்த்து 3 ஏக்கர் 36 செண்ட் நிலம் 1974ம் ஆண்டில் தங்கவேல் முதலியார் என்பவருக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டது என்றும், மேற்படி தங்கவேல் முதலியார் தன் குத்தகை பாத்தியத்தை வாதிக்கு விட்டுக் கொடுத்து, வாதியும் வசம் எடுத்து 2001ல் குத்தகை பதிவேட்டில் பதிவு செய்துள்ளார் என்றும், வாதி குத்தகை பாக்கி வைத்திருந்த காரணத்தால் வருவாய் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து குத்தகை பாக்கி தொகையை வாதி கட்டிவிட்டு தொடர்ந்து சாகுபடி செய்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அசல் வழக்கில் வா.சா.1ன் முதல் விசாரணை முடிந்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்ட நிலையில், மனுதாரர்/2ம் பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் வாதி தரப்பில் தமிழ்நாடு விவசாய நிலங்கள் குத்தகை உரிமைகள் சட்டம் 1969ன் கீழாக உரிய அதிகாரியால் வழங்கப்பட்ட எந்தவொரு உத்தரவையும் தடை செய்ய கோரி

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.01.03 17:29:10 +0530

இவ்வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றும், வாதி பதிவு பெற்ற குத்தகைதாரர் என விளம்புகை பரிகாரமும், முதல் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரியுள்ளதாகவும், 2ம் பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கில் பரிகாரம் எதுவும் கோரப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளதாலும், 2ம் பிரதிவாதி எதிர்வழக்குரையிலேயே வாதி பெயரை குத்தகை பதிவேட்டில் பதிவு செய்து குத்தகை தொகையை செலுத்தி தொடர்ந்து நிலத்தை சாகுபடி செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதாலும் மனுதாரரின் மனுவில் எவ்வித நற்கூறுகளும் இல்லை என்று தீர்மானித்து இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

7. **முடிவாக, இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை**.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 03ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.01.03 17:29:15 +0530

சார்பு நீதிபதி.
சீர்காழி

**பின் இணைப்பு**

**மனுதாரர் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்** – இல்லை–
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** – இல்லை–

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.01.03 17:29:21 +0530

சார்பு நீதிபதி,
சீர்காழி.

நேரிய / வரைவு உத்தரவு
இ.ம.எண்.07/2024 ல்
அசல்வழக்கு எண்.2/2022
நாள் –03.01.2026